



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் அன்னியூர் ஏ.சிவாவை ஆதரித்து காணை தெற்கு ஒன்றியம் காணை குப்பம் ஊராட்சியில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தேர்தல் பணிமனையில் தேர்தல் பணி குறித்த ஆய்வு செய்து பின்னர் வாக்கு வாக்குச் சேகரித்தார். உடன் நாகை மாவட்ட கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான என். கௌதமன் மற்றும் பலர் உள்ளனர்.



விக்கிரவாண்டி சட்டப்பேரவை இடைத் தேர்தலை முன்னிட்டு பனப்பாக்கம் ஊராட்சி தொகுதியில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட திமுக செயலாளர் வழக்கறிஞர் கே.கே. செல்லப்பாண்டியன் தலைமையில் கழக நிர்வாகிகளோடு இந்தியா கூட்டணியின் வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவாவிற்கு உதயசூரியன் சின்னத்திற்கு கழக நிர்வாகிகளோடு வாக்கு சேகரித்தனர். நிகழ்வில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன் , துணை மேயர் லியாகத் அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் சுப.சரவணன், மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.எஸ்.கருப்பையா, மாநகர அவைத்தலைவர் அ.ரெத்தினம், ஒன்றிய செயலாளர் சண்முகம், ஆர்.ஆர் சுவாமிநாதன், பொதுக்குழு உறுப்பினர் இராசு. சந்தோஷ்,மாமன்ற உறுப்பினர் ஜாஹிர் உசேன், கழக நிர்வாகிகள் புதுநகர் குமார், ராஜதுரை , அருண்குமார், ரமேஷ் குமார், இளங்கோவன் மற்றும் கழக தோழர்கள் கலந்துகொண்டனர்.

## விக்கிரவாண்டி தொகுதி – சின்னதச்சூர் பழங்குடி இன மக்களிடம்

# கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. - அமைச்சர் மா.மதிவேந்தன் வாக்கு சேகரிப்பு!

நாமக்கல் ஜூலை 9-

விக்கிரவாண்டி தொகுதியில் உள்ள சின்னதச்சூர் கிராமத்தில் பழங்குடி இருளர் இன மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். கடந்த இரண்டு தலைமுறைகளாக இப்பகுதியில் வாழ்ந்து வரும் இருளர் இன மக்கள், தாங்கள் கல்வி பெறத் தேவையான சாதி சான்றிதழ் மற்றும் பிற சான்றிதழ்கள் பெற முடியாமல் தவித்து வந்த நிலையில் தற்போதைய தி.மு.க. தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் பழங்குடி இருளர் இன மக்கள் வாழ்வாதாரம் மேம்பாட வேண்டும், குழந்தைகள் கல்வியில் முன்னேற வேண்டும் பொருளாதாரத்தில் முன்னேற வேண்டும் என்ற நோக்கில் சாதி சான்றிதழ் மற்றும் வீட்டுமனைப் பட்டா வழங்கி உள்ளார்.

விக்கிரவாண்டி தொகுதியில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், தமிழ்நாடு வனத்துறை அமைச்சர் மருத்துவர்மா.மதிவேந்தன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் வாக்கு சேகரித்து வந்தனர். அப்போது சின்னத்தச்சூர் குளத்துக்காடு பகுதி இருளர் இன மக்களை சந்தித்து வாக்கு சேகரித்தனர்.

**முதல்வருக்கு நன்றி!**

அப்போது இருளர் இன மக்கள் கூறும் போது, விக்கிரவாண்டி தொகுதியில் உள்ள சின்னத்தச்சூர் குளத்தாங்காடு பகுதியில் வாழ்ந்து வரும் இருளர் இன மக்களாகிய எங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கக் கோரி பத்தாண்டுகளுக்கு மேல் கோரிக்கை விடுத்து வந்தோம். ஆனால் இதுவரை எந்த ஆட்சியிலும், எந்தக் கட்சியினரும் பட்டா வழங்கவில்லை. எங்கள் இன மக்களை கண்டு கொள்ளாமல் தொடர்ந்து அலட்சியப்படுத்தி வந்தனர். இந்நிலையில் தற்போது உள்ள தி.மு.க. ஆட்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க.ஸ்டாலின் அவர்கள் எங்களுக்கு சாதி சான்றிதழ் உட்பட அனைத்து வித சான்றிதழ்களும், 2 1/2 சென்ட் நிலமும், வீட்டுமனைப் பட்டாவும் வழங்கி வீடு கட்ட ரூ 5 லட்சத்து 7 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து எங்களது வாழ்வில் ஒளியேற்றி உள்ளார்.

தற்போது தேர்தல் நேரத்தில் வந்த அனைத்துக் கட்சியினரும் இருளர் இன மக்கள் என எங்களை ஏளனமாக பேசி சென்றனர். தொடர்ந்து கோரிக்கையை கேட்டும், எந்த கட்சியினரும் எங்களை கண்டுகொள்ளவில்லை.

முதல்வரின் இந்த மனிதாபிமான செயலை கண்ட நாங்கள் அ.தி.மு.க.வில் இருந்து தி.மு.க.விற்கு மாறி விட்டோம். தி.மு.க. தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு எங்களது ஆதரவை தொடர்ந்து வழங்குவோம். எங்களது வாழ்வில் ஒளியேற்றிய முதல்வருக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம் என்று கூறினர்.

## விக்கிரவாண்டி இடைத்தேர்தல்

# திருவாரூர் மாவட்டக் கழகத்தினர் வாக்குச் சேகரிப்பு!

### பூண்டி கே.கலைவாணன் தலைமையில்!

திருவாரூர், ஜூலை 9-

விக்கிரவாண்டியில் நடைபெற இருக்கும் சட்டமன்ற இடைத்தேர்தலில் திருவாரூர் மாவட்ட செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் தீவிர வாக்குச் சேகரிப்பு பணிகளில் திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகளும் கழக தோழர்களும் ஈடுபட்டனர்.

தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் தளபதி, மாநில இளைஞர் அணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆகியோர்களின் வழிகாட்டுதல்களின் படி, விக்கிர வாண்டி இடைத்தேர்தல் பணிகளில் திருவாரூர் மாவட்ட செயலாளர் பூண்டி கே. கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் விக்கிர வாண்டி தொகுதியில் காணை ஒன்றிய பகுதியை சேர்ந்த 66 மற்றும் 67 ஆகிய பாகங்களில் இந்தியா கூட்டணியின் கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவிற்கு உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பு பணிகள் நடைபெற்றன.

விக்கிரவாண்டி கிழக்கு ஒன்றியம் வா.பகண்டை ஊராட்சியில் கழக மாநில விவசாய அணி செயலாளர் தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் தலைமையில் தீவிர வாக்கு சேகரிப்பு பணிகளும் நடைபெற்றன.

இந்த தேர்தல் பணிகளில் மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, துணைத்தலைவர் சேகர் கலியபெருமாள், ஒன்றிய பெருந்தலைவர்கள் புலிவலம் ஏ.தேவா, சோம.செந்தமிழ்செல்வன்,உமாப்ரியா, நகர் மன்ற தலைவர்கள் மன்னை. த.சோழராஜன், கவிதா பாண்டியன், பாத்திமா பஷீரா,மகாலெட்சுமி ,புவனப்ரியா செந்தில், மாவட்ட துணை செயலாளர்கள் எம்.எஸ்.கார்த்திக், எம்.ராமகிருஷ்ணன், மு. வெங்கடேசன், சாந்தி பாஸ்கர், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.ஆடலரசன், ஆர்.எஸ். பாண்டியன், கோ.செல்வம், பொதுக்குழு உறுப்பினர்கள் டி.செந்தில், செல்வ. ஜெயதேவன், கலைவாணி மோகன் , ஒன்றிய செயலாளர்கள் வீ.அன்பரசன், ஆர். பாலச்சந்திரன், வீ.எஸ். ஆர்.தேவதாஸ்,பால.ஞானவேல், எஸ்,ஜோதிராமன், கோ.தெட்சிணாமூர்த்தி, டி.எஸ்.டி.முத்துவேல், சித்தேரிசிவா, வழக்கறிஞர் நா.கவியரசு, கே.வி.கே. ஆனந்த், ஐ.வி.குமரேசன் ப. பிரபாகரன் ,கேப்டன். செல்வராஜ், வே.மனோகரன்,ப.பிரகாஷ், இரா. மனோகரன் , நகர செயலாளர்கள் வீரா.கணேசன், வாரை.எஸ்.பிரகாஷ், பா.சிவநேசன், ஏ.கே. டி.சேரன், நன்னிலம் பக்கிரிசாமி, கூத்தாநல்லூர் எஸ். வி.பக்கிரிசாமி, ஆர்.ராஜசேகரன், பேரளம் தியாகு, பூண்டி.கே.கலைவேந்தன், மற்றும் பனங்குடி ஏ.எஸ். குமார், பகலவன், ராஜ். என்கிற கருணாநிதி, எம். என்.ராஜா,குன்னலூர் அன்பழகன்,வீரா.தேசபந்து, பா.அரவிந்த் உள்ளிட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் விக்கிரவாண்டி தேர்தல் பொறுப்பாளர்களின் ஆலோசனைகளின்படி தேர்தல் பணிகளில் ஈடுபட்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவுப்படி, கல்லூரி கல்வி இயக்குனர் செ.கார்மேகம் அறிவுரைப்படி, நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவ, மாணவிகளுக்கான வழிகாட்டும் பயிற்சி முகாம் கல்லூரி முதல்வர் டாக்டர் ஏ.ராஜா வழிகாட்டுதலின்படி நடைபெற்றது. இதில் பேராசிரியர் பி.கமலக்கண்ணன் தலைமையில் மூத்த பத்திரிகையாளர்கள் முரசொலி ஏ.ஹெச்.ஷாகுல் அமீத், டிரினிட்டி மிரர் ஆர்.ரமேஷ்கிருஷ்ணன் ஆகியோர் பத்திரிகை மற்றும் ஊடகத்துறையில் மாணவர்களின் பங்கு குறித்து பேசினர். இம்முகாமில் பேராசிரியர்கள் கார்த்திகேயன், கணேசன், சின்னுசாமி, பி.செந்தில்குமார், SDAT பயிற்சியாளர்கள் எஸ்.பிரபு குமார், எஸ்.சதீஷ்குமாரி, புவனேஸ்வரி, ஆகியோர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி இடைத் தேர்தலை முன்னிட்டு காணை மத்திய ஒன்றியம் மேல்காரணை ஊராட்சியில் கழக வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து சேலம் கிழக்கு மாவட்ட கழக துணை செயலாளர் கு. சின்னதுரை தலைமையில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர். அப்போது தலைவாசல் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் பி. ஜி. அழகுவேல், கெங்கவல்லி பேரூர் கழக செயலாளர் சு.பாலமுருகன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஆர்.பி.பிரகாஷ், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் தங்கபாண்டியன், இளைஞரணி செல்வகிளிண்டன், வீரகனூர் முத்துசாமி மற்றும் மேல்காரணை தர்மலிங்கம் ,சரவணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில்

# முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான வழிகாட்டும் பயிற்சி முகாம்!

நாமக்கல் ஜூலை 9 -

தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசு கலைக் கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவ. மாணவிகள் சேர்க்கை நடைபெற்று வருகிறது. + 2 முடித்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் புதிதாக சேர்க்கப்பட்ட மாணவ, மாணவிகளுக்கு வரும் புதன்கிழமை அன்று வகுப்புகள் தொடங்கவும், அதற்கு முன்பு மாணவ, மாணவிகளுக்கு புத்தாக்க பயிற்சி மற்றும் வழிகாட்டும் பயிற்சி நடத்தப்பட வேண்டும் என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அதன்படி, கல்லூரி கல்வி இயக்குனர் செ.கார்மேகம், பள்ளிக்கல்வியை முடித்துவிட்டு கல்லூரிகளுக்குள் கனவுகளுடன் வரும் லட்சக்கணக்கான மாணவ, மாணவிகளை உற்சாகப்படுத்தும் வகையில் உயர்கல்வியின் அனைத்து அரசு கலை அறிவியல் கல்லூரி மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் முதலாம் ஆண்டு மாணவ மாணவிகளுக்கு முதல் 7 நாட்களுக்கு வழிகாட்டும் பயிற்சி நடத்தப்பட வேண்டும் என அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் மண்டல கல்லூரி கல்வி இயக்குனர் அனைத்து அரசு கலை அறிவியல் கல்லூரி முதல்வர்களுக்கு அறிவுறுத்தி உள்ளார் .

இந்த வழிகாட்டும் பயிற்சி முகாமில் சமூகத்தின் அனைத்து துறைகளிலும் வலுவான பல்வேறு சாதனையாளர்களை ஆசிரியர்கள், ஆய்வறிஞர்கள், அரசியல் ஆளுமைகள், தொல்லியலாளர்கள், விஞ்ஞானிகள், கல்வி வழிகாட்டுனர்கள், தன்னம்பிக்கை பேச்சாளர்கள், தடைகளை தாண்டி வெற்றி பெற்றுள்ள மூன்றாம் பாலினத்தார், உளவியல் நிபுணர்கள், தொழிலதிபர்கள், விளையாட்டு வீரர்கள், கலை இலக்கியவாதிகள், பல்துறை கலைஞர்கள், பத்திரிக்கை மற்றும் தொலைக்காட்சி ஊடகவியலாளர்கள் முன்மாதிரி பெண் ஆளுமைகள் அமைச்சர்கள் சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவட்ட ஆட்சியர்கள் காவல்துறை உயர் அதிகாரிகள் ஆகியோர் மாணவர்களுடன் உரையாடி வழி காட்ட வேண்டும் வழி காட்ட வேண்டும் என கூறியுள்ளார்.

அதன்படி தமிழ்நாடு முழுவதும் அரசு கலை அறிவியல் கல்லூரியில் கடந்த இரண்டு நாட்களாக முதலாம் ஆண்டு கல்லூரியில் சேர்க்கப்பட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்த மாணவ, மாணவிகளுக்கான புத்தாக்க பயிற்சி மற்றும் வழிகாட்டும் பயிற்சி நடைபெற்று வருகிறது.

அதன்படி நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவ, மாணவிகளுக்கான புத்தாக்க பயிற்சி மற்றும் வழிகாட்டும் பயிற்சி முகாம் கல்லூரி முதல்வர் டாக்டர் ஏ.ராஜா வழிகாட்டுதலின் படி கம்ப்யூட்டர் சயின்ஸ் துறை பேராசிரியரும் துறை தலைவருமான டாக்டர் பி.கமலக்கண்ணன், உடற்பயிற்சி இயக்குனர் டாக்டர் கார்த்திகேயன், கணிதத்துறை தலைவர் டாக்டர் கணேசன், இயற்பியல் துறை தலைவர் டாக்டர் சின்னுசாமி, தலைமையில் பயிற்சி முகாம் நடைபெற்றது.

முதலாம் ஆண்டு அனைத்து துறை மாணவிகளுக்கான பயிற்சி முகாமில் சிறப்பு விருந்தினர்களாக மூத்த பத்திரிகையாளர்கள் முரசொலி ஏ.ஹெச். ஷாகுல் அமீத், டிரினிடி மிரர் ஆர்.ரமேஷ் கிருஷ்ணன் ஆகியோர் பத்திரிகை மற்றும் ஊடகத்துறையில் மாணவர்களின் பங்கு என்ற தலைப்பிலும், அரூர் அரசு கலை அறிவியல் கல்லூரி உடற்பயிற்சி இயக்குனர் பி.செந்தில்குமார், விளையாட்டுத்துறை சார்பாக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு துறையின் நாமக்கல் மாவட்ட வால் சண்டை பயிற்சியாளர் எஸ்.பிரபு குமார், கால்பந்து பயிற்சியாளர் எஸ். சதீஷ்குமாரி, கோகோ / கபடி பயிற்சியாளர் புவனேஸ்வரி, ஆகியோர் கலந்து கொண்டு மாணவிகள் விளையாட்டு துறையில் , மாணவிகள் அவர்கள் திறனுக்கு ஏற்ற விளையாட்டினை தேர்வு செய்து திறனை வளர்த்துக் கொள்ளும் முறைகள் குறித்து விளக்கம் அளித்தனர்.

பயிற்சி முகாமில் அனைத்து துறையில் சேர்ந்த மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.




தருமபுரி மாவட்டத்தில் பேருந்து வழித்தடம் நீட்டிப்பு செய்யக்கோரி அளிக்கப்பட்ட மனுக்களின் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கையாக பாளையம்புதூர்,பென்னாகரம்இண்டூர்,உள்ளிட்ட 5 நீடிக்கப்பட்ட வழித்தட பேருந்துகளை மாவட்ட ஆட்சியர் திருமதி.சாந்தி,மற்றும் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்தனர்.உடன் நகர் மன்ற தலைவர் லட்சுமி நாட்டான் மாது,போக்குவரத்து பொது மேலாளர் செல்வம் நகர செயலாளர் நாட்டான் மாது,நகர துணை செயலாளர் முல்லைவேந்தன்,ஒன்றிய செயலாளர் வழக்கறிஞர் எம்.வீ.டி. கோபால் மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இராயபுரம் கே.இ. சம்பந்தம்

**ஜூலை 9 (1993)**



**நீதிக்கட்சிக் காலம் தொட்டு திராவிட இயக்க பற்றாளராக விளங்கியவர்.**

**வட்டக் கழகச் செயலாளராகவும், மாவட்ட பிரதிநிதியாகவும், இராயபுரம் பகுதி அவைத் தலைவராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**கழகத்திற்கு சொந்தமாக ஒரு அலுவலக கட்டிடம் வேண்டும் என்று அறிஞர் அண்ணா அவர்கள் விரும்பியபோது, இராயபுரத்தில் ஒரு கட்டிடத்தை முன்னின்று விலைபேசி கழகத்திற்கு வாங்கிட துணைபுரிந்தவர். அக்கட்டிடம் பின்னர் 'அறிவகம்' என்று அண்ணாவால் பெயர் சூட்டப்பட்டு தலைமைக் கழகமாக இயங்கியது**

**கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று ஏழு முறை சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**